சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.107/2021</u>

22.01.2026

வா.சா.5 திரு. வீரப்பன், த/பெ. மீனாட்சிசுந்தரம்

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை</u>**

நான் 1982 ஆம் வருடம் அரசுப்பணியில் சேர்ந்தேன். வாதி அசோகன் எனக்கு 1986 ஆம் வருடம் முதல் பழக்கமாவார். நான் அரசுப்பணிக்கு சேர்வதற்கு முன்பு என்ன தொழில் செய்தேன் என்றால் 1979 ல் படித்துக்கொண்டிருந்தேன், 2 வருடங்கள் விவசாயம் செய்தேன். தற்போது விவசாயம் செய்கிறேனா என்றால் ஆமாம். எனக்கு புதுக்கோட்டை மாவட்டத்தில் 3, 4 கிராமங்களில் எனக்கு விவசாய நிலங்கள் உள்ளது. எனக்கு விவசாயம் நிலங்கள் உள்ளது என்பதை காட்ட ஆவணம் உள்ளதா என்றால் உள்ளது. தாக்கல் செய்யலாமா என்றால் செய்யலாம். நான் 1993 ல் கூட்டாக தொழில் செய்தததாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான்.அதற்கு மேலதிகாரியிடம் அனுமதி வாங்கினேனா என்றால் இல்லை. எனக்கும் அசோகனுக்கும் இடையே கூட்டு வியாபர ஒப்பந்தம் எழுத்து மூலமாக ஏற்பட்டுள்ளது என்றால் இல்லை. நான் 1993 ல் கூட்டு வியாபாரத்திற்காக ரூ.50,000/- முதலீடு செய்தேன். நாங்கள் 9 நபர்கள் சேர்ந்து கூட்டு வியாபாரம் செய்தோம். அந்த தொகையிலிருந்து தான் நிலங்கள் வாங்கப்பட்டதா என்றால் ஆமாம். எங்கள் கூட்டு வியாபாரத்திற்கு Friends Fish Form எனபெயர் வைத்திருந்தோம். 9 கூட்டு ஒப்பந்தத்தாரர்கள் எனக்கு நண்பர்கள் தான் அதில் ஒருவர் பேராசியராக இருந்தார். ஒருவர் வழக்கறிஞர் ஆவார். கூட்டு வியாபாரத்தை பதிவு செய்திருந்தோமா என்றால் இல்லை. எங்கள் கூட்டு நிறுவனத்தை அசோகன் தான் மேலாண்மை செய்து வந்தார். கணக்கு வழக்கை அவர்தான் பார்த்து வந்தார். வருடா வருடம் கூட்டம் போட்டு வரவுசெலவு கணக்கு பார்த்து லாபத்தை பிரித்துக்கொள்வோம். வரவு செலவு கணக்கு ஆடிட்டர் மூலமாக ஆய்வு செய்யப்பட்டுள்ளதா என்றால் இல்லை. கூட்டுவியாபார நிறுவனமான Friends Fish Form க்கு பேன்கார்டு உள்ளதா என்றால் இல்லை. கூட்டு வியாபாரத்திலிருந்து வந்த வருமானத்திற்கு வருமானவரி செலுத்தியுள்ளோமா என்றால் இல்லை. நான் தனிப்பட்ட முறையில் வருமானவரி கணக்கு தாக்கல் செய்யும் போது கூட்டு வியாபாரத்திலிருந்து எனக்கு கிடைத்த

வருமானத்தை காட்டியுள்ளேனா என்றால் இல்லை, அந்த அளவிற்கு வருமானம் இல்லை. எனக்கு வாதியும் அவரின் தகப்பனாரும் நன்கு பழக்கமானவர்கள் என்றால் சரிதான். அன்பழகன் சென்னையில் உள்ள ஏற்றுமதி நிறுவனத்தில் மேலாளராக இருந்தார் என்றால் சரிதான். அன்பழகனுக்கும் வாதிக்கும் எப்போது பிரச்னை ஏற்பட்டது என்றால் 2013 ஆம் வருடத்தில் ஏற்பட்டது. நான் 2016 ல் பணி ஓய்வு பெற்ற பின்னிட்டு அன்பழகனின் தகப்பனாரிடமிருந்து பெற்ற சொத்தை திரும்ப எழுதி கொடுக்க சொன்னேன் அவர் ஒத்துவரவில்லை. 1 மாதத்திற்குள் செட்டில் செய்வதாக சொன்னார். அன்பழகனிடம் எழுதி வாங்கினேனா என்றால் இல்லை. தற்போது சாட்சி அன்பழகன் 1 மாதத்தில் எழுதிக்கொடுப்பதாக சொல்லவில்லை என்றும், அன்பழகனின் மகன் பக்கிரிசாமிதான் 1 மாதத்தில் எழுதிவாங்கி கொடுப்பதாக சொன்னதாக பதில் அளிக்கிறார். 2013 ஆம் வருடத்திலேயே வருவாய்துறை ஆவணங்கள் அன்பழகன் பெயரில் மாற்றப்பட்டுவிட்டது என்றால் சரிதான். அசோகன் சொல்லிதான் நான் கேட்டேனா என்றால் ஆமாம். 1 மாதத்தில் எழுதி வாங்காததால் நானோ, அசோகனோ நடவடிக்கை எடுத்தோமா என்றால் இல்லை. எங்கள் கூட்டு வியாபாரம் தற்போதும் நடந்துவருகிறதா என்றால் கொரோனா காலத்திற்கு பிறகு வியாபாரம் நடக்கவில்லை. அசோகன் மீது அன்பழகன் வழக்கு போட்ட விவரத்தை அசோகன் என்னிடம் சொன்னார். எந்த வருடம் என்று ஞாபகமில்லை. இந்த வழக்கு குறித்து எப்போது எனக்கு தெரியும் என்றால் சுமார் 1 1/2 வருடத்திற்கு முன்பு தெரியும். நாங்கள் கூட்டு வியாபாரம் செய்ததற்கு ஏதேனும் ஒரு ஆவணமாவது உள்ளதா என்றால் இல்லை. நான் அசோகனுக்கு நெருங்கிய நண்பர் என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல. கூட்டு வியாபாரம் செய்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.